# சுயமாக ஸ்வாப் (எச்சில்/சளி மாதிரி) செய்வதற்கான வழிகாட்டி

## கீழ்கண்டவை ஏற்பட்டிருந்தால் ஸ்வாப் செய்வதைத் தவிர்க்கவும்:



கடந்த 24 மணி நேரத்தில் மூக்கில் இரத்தக் கசிவு



கடந்த 4 **வாரங்களில்** மூக்கில் அறுவை சிகிச்சை



கடந்த 8 **வாரங்களில்** முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தால்

## ஸ்வாப் செய்வதற்கான செயல்முறை

**1** பரிசோதனையை ஆரம்பிப்பதற்கு முன் உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.



**2** பரிசோதனையை ஆரம்பிப்பதற்கு முன், தயவுசெய்து ஒரு ஸ்வாப் குச்சி, ஒரு குழாய் மற்றும் காட்ரிஜ் எனப்படும் ஒரு பொதியுறையை எடுத்துக் கொள்ளவும். குழாயின் அடைப்பு மூடியைத் திறக்கவும். பொட்டலத்திலிருந்து பொதியுறையை வெளியே எடுக்கவும்.



**3** பையிலிருந்து ஸ்வாப் குச்சியை அகற்றவும்.



**4** மூக்கு துவாரம் வழியாக ஸ்வாப் குச்சியைச் செலுத்தவும் (~2.5 செ.மீ). குச்சியை 5 முறை சுழற்றி 5 விநாடிகளுக்கு அப்படியே விட்டு விடவும்.




**5** அதே ஸவாப் குச்சியை மற்ற மூக்குத் துவாரத்திற்கும் பயன்படுத்தவும்.



**6** குழாயில் ஸ்வாப் குச்சியைச் நுழைக்கவும். ஸ்வாப் குச்சியை 15 விநாடிகளுக்கு மேலும் கீழுமாக குழாயில் மூக்கவும்.



**7** குழாயை அமுக்கி ஸ்வாப் குச்சியை வெளியில் எடுக்கவும்.



**8** குழாயின் அடைப்பு மூடியை இறுக்கமாக மூடவும். "கிளிக்" எனும் ஒலியை நீங்கள் கேட்க வேண்டும்.



**9** உங்கள் விரலைப் பயன்படுத்தி குழாயின் பக்கவாட்டில் ஒரு சில முறை மெதுவாகத் தட்டவும். இது கலவையைக் கலக்க உதவும்.



**10** சோதனை பொதியுறையின் மாதிரி கலனில் 3 சொட்டுகளை இடவும்.



**11** பரிசோதனை பொதியுறையில் முடிவுகளைச் சரிபார்க்கும் முன் 15 நிமிடங்கள் காத்திருக்கவும். இவ்வேளையில் பொதியுறையை ஒரு தட்டையான மேற்பரப்பில் வைக்கவும்.

15 நிமிடங்கள்



**12** பரிசோதனை பொதியுறையில் சோதனை முடிவுகளைப் பார்க்கவும். **"C" மற்றும் "T" நிலை இரண்டிலும் ஒரு கோடு தோன்றுவதை நீங்கள் கண்டால், இது பாசிடிவ், அதாவது, நேர்மறையான சோதனை முடிவைக் குறிக்கிறது. இப்பரிசோதனை முடிவை மேலும் மதிப்பீடு செய்வதற்கும், அதனை உறுதிப்படுத்தும் பரிசோதனை செய்வதற்கும் தயவுசெய்து மருத்துவ உதவியை நாடவும்.**

**"C" நிலையில் மட்டுமே ஒரு கோடு தோன்றுவதைக் கண்டால்,** இது எதிர்மறையான, அதாவது, நெகடிவ் முடிவைக் குறிக்கிறது.

**"T" நிலையில் மட்டும் ஒரு கோடு தோன்றுவதை நீங்கள் கண்டால்,** பரிசோதனை செல்லுபடி ஆகாது. மற்றொரு சோதனை கருவியைப் பயன்படுத்தி பரிசோதனையை மீண்டும் செய்யவும்.

நேர்மறை | எதிர்மறை | செல்லுபடியில்லை




**13** பயன்படுத்தப்பட்ட அனைத்து ஸ்வாப் குச்சிகள், குழாய் மற்றும் சோதனை பொதியுறையை பயோஹசார்ட் பையில் அப்புறப்படுத்தவும்.



**14** பரிசோதனை செய்தப் பிறகு உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.

